OS 110/2018
வா.சா.5 இந்துமதி க/பெ வெங்கட்ராமன்
நாள் 25.09.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் எம்எஸ்சி படித்திருக்கிறேன். நான் படித்திருப்பதால் சட்டதிட்டங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதி அமுதாவை எனக்கு எப்படி தெரியும் என்றால் எங்கள் வீட்டில் பட்டு மளிகை வைத்திருந்தார்கள் அப்போது சேலை வாங்க வரும்போது தெரியும். பட்டு மளிகை பெயர் கோதண்டம் சில்க்ஸ் வள்ளியம்மை சில்க்ஸ் ஆகும். கோதண்டம் சில்க்ஸ் எனது பெரியப்பா நடத்தி வருகிறார் வள்ளியம்மை சில்க்ஸ் எனது அப்பா நடத்தி வருகிறார். எனது வீட்டு முகவரியில் தான் சில்க்ஸ் நடத்தி வந்தார் என்றால் சரிதான். நான் திருமணத்திற்கு முன்பு சில்க்ஸ்ல் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. என்ன தேவைக்காக பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேன் என்றால் வீட்டு அவசர தேவைக்காக கேட்டார் வட்டி போட்டு கொடுப்பதாக சொன்னார். எவ்வளவு ரூபாய் ரொக்கம் கொடுத்தேன் என்றால் ரூ.3 லட்சம் கொடுத்தேன் ரூ100க்கு ரூ.2 வட்டியாகும். 1 மாதத்திற்கு ரூ.6 ஆயிரம் வட்டி ஆகும் என்றால் சரிதான்.

2. எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் 17.10.2006ல் ரிஜிஸ்டர் ஆபிசில் வைத்து கொடுத்தேன். பணம் காசோலை மூலம் கொடுத்தேனா அல்லது ரொக்கமாக கொடுத்தேனா என்றால் ரொக்க பணமாக கொடுத்தேன். வருமான வரி சட்டப்படி ரூ. 20 ஆயிரத்திற்கு மேல் பணம் கொடுத்தால் காசோலையாகவோ அல்லது வங்கி மூலம் தான் அளிக்க வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் அந்த அளவுக்கு விவரம் தெரியாது. ரூ.3லட்சத்திற்கு வரி கட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2006ல் பணம் கொடுத்தேன் எப்போது பணத்தை திருப்பி கேட்டேன் என்றால் அடிக்கடி கேட்டேன். வட்டி கொடுப்பதாக சொன்னார் வட்டியும் கொடுக்கவில்லை. வாதி ஆகிய எனது அப்பா கேஸ் ஏஜென்சி வேலூரில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் ஆரணி கூட்டுறவு சங்கத்தில் மேலாளராக பணிபுரிந்து வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தும் அளவிற்கு வசதி வாய்ப்பு இருப்பதை தெரியாமல் கடன் கொடுத்தேனா என்றால் சொத்து அடமானம் போட்டு கொடுத்தார். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் இல்லத்தரசி ஆவார் விவசாயமும் செய்வார். கடன் கொடுத்தது எனது அப்பா என்றாலும் என்னை பினாமியாக பயன்படுத்தி உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. ரூ.3 லட்சத்தை எனது அப்பாவிடம் வாங்கி கொடுத்தேன் என்றால் இல்லை. எந்த தேதியில் பிரதிவாதியிடம் பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டேன் என்றால் 2017ல் கேட்டேன். பிரதிவாதி முறையாக வட்டி செலுத்தியதால் தான் 11 வருடங்களுக்கு நான் கடனை திருப்பி கேட்கவில்லை என்றால் வட்டி கேட்டுக்கும் போதெல்லாம் குடும்ப சூழ்நிலை சரியல்ல என்று சொன்னார். வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் 23.05.2017ல் அனுப்பியிருக்கிறேன். என்ன விவரம் சொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அசலும் வட்டியும் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

4. அறிவிப்பில் எவ்வளவு காலத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று விவரம் சொல்லப்பட்டதா என்றால் எனக்கு அவசர தேவை உள்ளதால் கூடிய சீக்கிரத்தில் தரும் படி சொல்லப்பட்டுள்ளது. அறிவிப்பு நான் அனுப்பவில்லை என்றாலும் நான் அனுப்பியிருந்தால் அதில் கையொப்பம் போட்டிருப்பேன் என்றாலும் எனக்கு அறிவிப்பில் உள்ள விவரங்கள் தெரியாது என்றாலும் எனது அப்பா தான் அறிவிப்பை அனுப்பினார் என்றாலும் சரியல்ல. அறிவிப்பு அனுப்பிய பிறகு நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் அவர் அறிவிப்பை வாங்கவில்லை. எனது அவசர தேவைக்காக எனது பணம் வாங்கிக்கொண்டு அவருக்கு எழுதி கொடுத்துவிட்டேன். மேடோவர் எப்போது செய்யப்பட்டது என்றால் 07.10.2017 அன்று எழுதப்பட்டது. அறிவிப்பு அனுப்பிய 5 மாத காலத்திற்கு பிறகு தான் மேடோவர் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேடோவர் ரிஜிஸ்டர் ஆபிசில் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேடோவர் எழுதும் போது எனது அவசர தேவைக்காக என்று எழுதப்பட்டதா என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை தேவைக்காக பணம் வாங்குவதாக எழுதப்பட்டுள்ளது.

5. மேடோவர் எங்கு எழுதப்பட்டது என்றால் சில்க்ஸ் பேக்டரியில் வைத்து எழுதப்பட்டது. அதில் சாட்சி கையொப்பம் செய்த தாமோதரன், சத்தியராஜ் ஆகிய இருவரும் எனது அப்பாவிடம் வேலை செய்பவர்கள் என்றால் சரிதான். 07.10.2017ம் வருடம் மேடோவர் செய்யும் போது எவ்வளவு தொகை வாங்கினேன் என்றால் அசல் ரூ.3 லட்சமும் வட்டி ரூ.7,92,600/- ஆக மொத்தம் ரூ.10,92,600/- வாங்கினேன். மேற்படி தொகையை காசோலையாக வாங்கினேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலம் வாங்கினேனா என்றால் ரொக்கப்பணமாக வாங்கினேன். ரூபாய் தாள் விவரம் சொல்லமுடியுமா என்றால் 500 ரூபாய் தாள்களாகவும் 100 ரூபாய் தாள்களாகவும் வாங்கினேன். நான் சொல்வது பொய் என்றாலும் மேடோவருக்கு எந்த பிரதிபலனும் நான் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. மேமோவரில் நான் ரூ.10,92,600/- பெற்றுக்கொண்டதாக விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேடோவர் செய்யப்பட்ட காலகட்டத்தில் பண மதிப்பிழப்பு காரணமாக ஒரு நபருக்கு அதிகப்பட்சமான ஒரு நாளைக்கு ரூ.20 ஆயிரம் மட்டுமே எடுக்க முடியும் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. ஆர்பிஐ விதிகளின் படி வங்கி மூலம் தான் பணப்பரிவர்த்தனை செய்யப்பட்டிருக்க வேண்டும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் இருந்து எனக்கு பிரதிபலன் கிடைக்கவில்லை என்பதால் மேடோவர் செல்லாது என்றால் சரியல்ல. முறைாக பிரதிபலன் ஏற்பட்டு இருந்தால் அதை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருப்பேன் என்றாலும் பிரதிபலன் ஏற்படவில்லை என்பதால் தான் மேடோவர் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் முறையாக வருமான வரி செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் எனது வருமான வரி கணக்கில் ரூ.10,92,600/- பணத்தை கணக்கு காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதி மாதா மாதம் எனது அப்பாவிடம் (வாதி) வட்டி செலுத்தினார் என்றாலும் அதனால் தான் 11 வருடங்கள் 10 மாதங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் வழக்கு விவரங்கள் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வட்டி செலுத்தாமல் இருந்திருந்தால் நான் 3 வருடத்திற்குள் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.